யு.எஸ்.ஏ-விற்கு வெளியேயான பயன்பாட்டிற்கு மட்டும் • *ஆய்வுக்கூடச் சோதனை முறையில்* நோயறிதல் பயன்பாட்டிற்கானது • மீண்டும் பயன்படுத்தக் கூடாது

SINGAPORE TAMIL

SINGAPORE MALAY

ORAQUICK®

எச்.ஐ.வி சுயபரிசோதனை

பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்

OraQuick® எச்.ஐ.வி சுயபரிசோதனை என்பது வாய்வழித் திரவத்தில் எச்.ஐ.வி-1 மற்றும் எச்.ஐ.வி-2 எதிர்ப்பரதங்களின் சுயபரிசோதனைக்காகப் பயன்படுத்தப்படும் ஆய்வுக்கூடச் சோதனை முறையிலான நோயறிதல் சார்ந்த மருத்துவச் சாதனம் (IVD). பாதிக்கப்பட்ட நபர்களிடம் எச்.ஐ.வி-1 மற்றும் எச்.ஐ.வி-2 எதிர்ப்பரதங்களைக் கண்டறிய உதவுவதை இந்தப் பரிசோதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. **துல்லியமான முடிவுகளைப் பெறுவதற்கு, பரிசோதனை வழிகாட்டுதல்களை நீங்கள் பின்பற்ற வேண்டும்.**

எச்சரிக்கை: நீங்கள் எச்.ஐ.வி சிகிச்சை எடுத்து வருகின்ற பட்சத்தில் தவறான முடிவுகளைப் பெறக்கூடும். PrEP எடுத்துவரும் நபர்களில் OraQuick® எச்.ஐ.வி சுயபரிசோதனையின் செயல்திறனை நிரூபிப்பதற்கான மருத்துவத் தரவு சேகரிக்கப்படவில்லை. **பரிசோதனையைத் தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்பு எதுவும் சாப்பிடவோ அருந்தவோ கூடாது. மேலும் பரிசோதனையைத் தொடங்குவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு வாயைச் சுத்தப்படுத்துகின்ற தயாரிப்புகளைப் பயன்படுத்தக் கூடாது.**

வழிகாட்டுதல்களைக் காண்க
bit.ly/OQHIVSTtamil

வழிகாட்டுதல்களைக் காண்க
oraquick.com

ORAQUICK® எச்.ஐ.வி சுயபரிசோதனைத் தொகுப்பை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்

1

பரிசோதனையைச் செய்வதற்கு நேரத்தைக் குறித்துக்கொள்ள நீங்கள் வழிவகை செய்துகொள்ள வேண்டும்.

2

தொகுப்பில் அடங்குபவை: **பரிசோதனைத் தொகுப்பு, பரிசோதனை ஸ்டாண்டு, பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்** மற்றும் **அகற்றுவதற்கான பை.** பரிசோதனையைத் தொடங்குவதற்கு இந்தப் பொருட்களை வெளியே எடுக்கவும்.

3

உங்கள் பரிசோதனைத் தொகுப்பில் இரண்டு உறைகள் இருக்கும்.

4

குழாய் இருக்கின்ற உறையைக் கிழித்துத் திறக்கவும்.

5

மூடியை அகற்றவும்.

6

அதிலுள்ள திரவத்தை வெளியே கொட்டிவிடக் **கூடாது**. குடிக்கக் **கூடாது**.

7

குழாயை **ஸ்டாண்டின்** மீது வைக்கவும்.

8

பதப்படுத்தும் பொருள் குப்பையில் எறிந்துவிடவும். இது பரிசோதனைக்குத் தேவையில்லை. **சாப்பிடக் கூடாது.**

பரிசோதனைச் சாதனம் இருக்கின்ற உறையைக் கிழித்துத் திறந்து, சாதனத்தை வெளியே எடுக்கவும். அதன் தட்டையான மெத்தை அட்டையை உங்கள் விரல்களால் தொட்டுவிடக் **கூடாது**. பதப்படுத்தும் பொருளைச் சாப்பிடவோ விழுங்கவோ **கூடாது**..

9

தட்டையான மெத்தை அட்டையை உங்கள் பல் ஈறுகளில் உறுதியாக வைத்து அழுத்தி, **வாயின் மேற்புற ஈறு** (படம் 1) மற்றும் **வாயின் கீழ்புற ஈறு** (படம் 2) முழுவதும் அதைத் தேய்த்து எடுக்கவும்.

10

குழாயின் கீழ்ப்பகுதியை அடையும் வரை **தட்டையான மெத்தை அட்டையைக்** குழாயினுள்ளே நுழைக்கவும்.

11



20 நிமிடங்களுக்கு அப்படியே விட்டுவிட்டு பின்னர் முடிவுகளைப் பார்க்கவும்.
40 நிமிடங்களுக்குப் பிறகு முடிவுகளைப் பார்க்க வேண்டாம்.

முடிவுகளைப் புரிந்துகொள்ளுதல் நன்கு வெளிச்சமான பகுதியில் முடிவுகளைப் படிக்கவும்

எச்.ஐ.வி உள்ளது (பாஸிடிவ் முடிவு)



இரண்டு முழுமையான கோடுகள் தோன்றுவது. இதில் ஒரு கோடு மங்கலாக இருந்தாலும், எச்.ஐ.வி பாஸிடிவ் என்பதைக் குறிக்கலாம். மேலும் எச்.ஐ.வி நோயறிதலை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சிபெற்ற நிபுணரிடம் நீங்கள் கூடுதல் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

99.4% நபர்கள் (153 நபர்களில் 152 பேர்) தங்களுக்கு எச்.ஐ.வி இருப்பது (பாஸிடிவ்) சரியாகக் காட்டப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். அதாவது எச்.ஐ.வி பாதிக்கப்பட்ட 153 நபர்களில் 1 நபருக்கு மட்டுமே பரிசோதனையில் எச்.ஐ.வி இல்லை (நெகடிவ்) என்று கண்டறியப்பட்டது. இது தவறான எதிர்மறை முடிவு (False negative) என்று அழைக்கப்படுகிறது.

முடிந்தவரை விரைவில் . . .

அருகாமையில் உள்ள எச்.ஐ.வி பரிசோதனை மையம் அல்லது சுகாதாரக் கூடத்திற்குச் செல்லுங்கள்

எச்.ஐ.வி இல்லை (நெகடிவ்)

20 நிமிடங்களுக்கு முன்பு பார்ப்பது, சரியான முடிவைத் தராமல் போகலாம்

"C" என்பதை அடுத்து ஒரு கோடு தோன்றி, "T" என்பதை அடுத்து எந்தக் கோடும் இல்லை என்றால் எச்.ஐ.வி இல்லை (நெகடிவ்) என்று அர்த்தம்.

99.0% நபர்கள் (717/724) எச்.ஐ.வி இல்லை (நெகடிவ்) என்பது சரியாகக் காட்டப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். அதாவது எச்.ஐ.வி பாதிக்கப்படாத 724 நபர்களில் 7 நபருக்கு மட்டுமே பரிசோதனையில் எச்.ஐ.வி உள்ளது (பாஸிடிவ்) என்று கண்டறியப்பட்டது. இது தவறான நேர்மறை முடிவு (False positive) என்று அழைக்கப்படுகிறது.

வழக்கமான பரிசோதனையை மேற்கொள்ளுங்கள். நீங்கள் எச்.ஐ.வி தொற்றுக்கு வெளிப்பட்டிருந்தால், 3 மாதங்களில் மீண்டும் ஒருமுறை பரிசோதித்திடுங்கள்.

செல்லுபடியாகாத முடிவு



"C" என்பதை அடுத்து எந்தக் கோடும் இல்லாமல் இருப்பது ("T" என்பதை அடுத்து ஒரு கோடு இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல), பரிசோதனைக் கோடு அல்லது கட்டுப்பாட்டுக் கோடு முழுமையாக இல்லாமல் இருப்பது (கோடு குறுக்கே முழுமையாகத் தோன்றாமல் இருப்பது) அல்லது பரிசோதனை முடிவைப் பார்க்க முடியாத வகையில் சிவப்பு நிறப் பின்னணியுடன் இருப்பது ஆகியவை பரிசோதனை செயல்படவில்லை, மீண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றன. **நீங்கள் பரிசோதனையை மீண்டும் மேற்கொள்ள வேண்டும்.**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் 1.8% நபர்களால் (900 நபர்களில் 16 பேர்) பரிசோதனையின் முடிவைப் பெற முடியவில்லை.

அவர்களின் பரிசோதனை சரியாகச் செயல்படவில்லை. மீண்டும் பரிசோதிப்பதற்கு அருகாமையில் உள்ள எச்.ஐ.வி பரிசோதனை மையம் அல்லது சுகாதாரக் கூடத்திற்குச் செல்லுங்கள்.

முடிவு உறுதியாகத் தெரியவில்லை

உங்கள் முடிவை அறிந்துகொள்ள முடியவில்லை என்றாலோ அல்லது உறுதியாகத் தெரியவில்லை என்றாலோ. மீண்டும் பரிசோதிப்பதற்கு அருகாமையில் உள்ள எச்.ஐ.வி பரிசோதனை மையம் அல்லது சுகாதாரக் கூடத்திற்குச் செல்லுங்கள்.

அகற்றுதல்

பரிசோதனைக் குச்சியை அகற்றிவிட்டு, சோதனைக் குழாயை மூடியைக் கொண்டு மூடிவிட்டு, அகற்றுவதற்காக வழங்கப்பட்டுள்ள பையினுள் போடவும். இந்தப் பையை வழக்கமான குப்பைத் தொட்டியில் போட்டு அகற்றவும்.

தயாரிப்பு குறித்த தகவல்

REF 5X4-1000, 5X4-1001, 5X4-2001

எச்சரிக்கைகளும், முன்னெச்சரிக்கைகளும்

- நீங்கள் எச்.ஐ.வி உள்ள (பாஸிடிவ்) நபராக இருந்தால், இந்தப் பரிசோதனையைப் பயன்படுத்த **வேண்டாம்.**
- வீட்டைச் சுத்தம் செய்யும் பொருட்கள் (அதாவது, ப்ளீச் போன்றவை) பரிசோதனைத் தொகுப்பின் மீது பட்டிருந்தால், தொகுப்பைப் பயன்படுத்த **வேண்டாம்.**
- செயற்கைப் பற்கள் போன்ற பல மருத்துவத் தயாரிப்புகள் அல்லது ரானுகளை மூடும் வகையில் உள்ள வேறு ஏதேனும் தயாரிப்புகள் வாயில் பொருத்தப்பட்டிருந்தால், வாய்வழி திரவத்தைச் சேகரிப்பதற்கு முன்பு அவற்றை அகற்றவும்.
- நீங்கள் எச்.ஐ.வி தடுப்பு மருந்து தொடர்பான மருத்துவ சோதனையில் பங்கேற்றிருந்தால், இந்தப் பரிசோதனையைப் பயன்படுத்தும்போது நோய் உள்ளது (பாஸிடிவ்) என்ற முடிவைப் பெறலாம். ஆனால் அது நீங்கள் எச்.ஐ.வி நோயால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்று அர்த்தமாகாது. உங்கள் சுகாதாரக் கூடத்தில் நீங்கள் பின்தொடர்தலுக்காக நாட வேண்டும்.
- இந்தத் தொகுப்பில் ஏதேனும் பொருட்கள் விடுபட்டிருந்தாலோ, உடைந்திருந்தாலோ அல்லது தொகுப்பு திறக்கப்பட்டிருந்தாலோ இதைப் பயன்படுத்த **வேண்டாம்.**
- தொகுப்பின் வெளிப்புறம் குறிக்கப்பட்டிருக்கும் 'பயன்படுத்த வேண்டிய தேதி' கடந்துவிட்ட பின்னர் பரிசோதனைக்காகத் தொகுப்பைப் பயன்படுத்த வேண்டாம்.

பரிசோதனையின் கட்டுப்பாடுகள்

- வாயில் இரத்தக்கசிவு இருப்பது செல்லுபடியாகாத முடிவை வழங்கலாம். பரிசோதனையின் முடிவு செல்லுபடியாகாததாகப் பெறப்பட்டால், அருகாமையில் உள்ள பரிசோதனை மையம் அல்லது சுகாதாரக் கூடத்திற்குச் செல்லுங்கள்.
- கடந்த 3 மாதங்களுக்குள் ஏற்பட்டுள்ள எச்.ஐ.வி நோய்த்தொற்றுகளை OraQuick® எச்.ஐ.வி சுயபரிசோதனையால் கண்டறிய இயலாமல் போகலாம்.
- நோய் உள்ளது (பாஸிடிவ்) என்பதைக் காட்டுகின்ற முடிவுகளுக்கு, மாதிரியில் உள்ள எதிர்ப்புரதத்தின் அளவுக்குச் சமமாகப் பரிசோதனைக் கோட்டின் அடர்த்தி இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.
- 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குச் சுயபரிசோதனைக்காகப் பயன்படுத்துவதற்கு இந்தத் தயாரிப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

குறுக்கிடும் உட்பொருட்கள் மற்றும் தொடர்பற்ற மருத்துவ நிலைகள்

உங்களுக்கு HBV, HCV **அல்லது** HTLV (I/II) **இருந்தால், நீங்கள் தவறான முடிவைப் பெறக்கூடும்.** உணவு மற்றும் பானங்களை உட்கொண்ட பிறகு 15 நிமிடங்களும், வாய்ப் பராமரிப்புக்கான தயாரிப்புகளைப் பயன்படுத்திய பிறகு 30 நிமிடங்களும் காத்திருந்த பின்னர் பரிசோதனையை மேற்கொள்ளும்படி பயனர்களுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

சின்னங்களின் விளக்கம்

LOT தொகுப்புக் குறியீடு	IVD *ஆய்வுக்கூடச் சோதனை முறை நோயறிதல் மருத்துவச் சாதனம்*	0-35 வயதுக் கட்டுப்பாடு	DOM உற்பத்தித் தேதி
மீண்டும் பயன்படுத்தக் கூடாது	இத்தேதிக்குள் பயன்படுத்த வேண்டும்	பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களைப் பார்க்கவும்	
வெப்பநிலை வரம்பு	எச்சரிக்கை, உடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களைப் பார்க்கவும்	EXP காலாவதித் தேதி	
REF கேட்டலாக் எண்	உற்பத்தி	உற்பத்தித் தேதி	

தாய்லாந்து நாட்டிற்காக :

OraSure Technologies, Inc.
220 East First Street, Bethlehem, PA 18015 USA
(+1) 610-882-1820 • www.OraSure.com

© 2020, 2024 OraSure Technologies, Inc. • OraQuick®, சின்னம் வடிவமைப்பு மற்றும் உள்ளமைவு ஆகியவை OraSure Technologies, Inc நிறுவனத்தின் வணிகக் குறியீடுகளாகும்..

Item# 3001-3271 rev. 01/20B